பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

# தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்

# வெற்றிடங்கள்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், அக்ரகார மருத்துவ காப்புறுதித் திட்டம், மோட்டார் வாகன காப்புறுதி, சாதாரண காப்புறுதி போன்ற காப்புறுதித் திட்டங்களைச் செயற்படுத்துவதோடு உள்நாட்டு காப்புறுதியாளர்களின் மீள்நிதியப்பாளராக செயற்படும் இலங்கையினுள் நிறுவப்பட்டுள்ள ஒரே நிறுவனமாகும். இந்த நிதியம் 18 வருடங்களுக்கு மேலாக அதன் இருப்பில் அடைந்த பெறுமைமிக்க சாதனை கண்டுபிடிப்பு, வளர்ச்சி மற்றும் இலாபம் ஆகியவற்றுடன் உள்நாட்டு காப்புறுதி தொழிலில் முதலாவது இடத்தைப் பிடித்துள்ள அரச நிறுவனமாகும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்காக தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. முகாமையாளர் - பொது நிர்வாகம் மற்றும் செயற்பாடுகள் (HM 1-2)
## Manager – General Administration & Operation

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மனிதவள முகாமைத்துவம்/ வியாபார முகாமைத்துவம் / அரச நிர்வாகம் / அரச முகாமைத்துவம் அல்லது வர்த்தகத்தில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   அத்துடன்

   இயைபுடைய துறை தொடர்பான பட்டப் பின்படிப்பு (Masters) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

   அல்லது

   பதவியின் விடயப் பரப்பிற்கு இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் (Associate Membership)

   மற்றும்

   கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை அல்லது நியாயாதிக்க நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 15 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2. பதவியின் விடயப் பரப்பிற்கு இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

   மற்றும்

   கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை அல்லது நியாயாதிக்க நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 15 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமை
2. பதவியின் விடயப் பரப்பிற்கு இயைபுடைய துறையில் 1ஆம் வகுப்பு முகாமைத்துவ வகுதியில் (MM) குறைந்தபட்சம் ஐந்து (5) வருடங்கள் திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு** : HM 1-2 - 2016: ரூபா [81,670 - 15 x 2,270 – 115,720.00]

**வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## 02. உதவி முகாமையாளர் - அக்ரஹார (MM 1-2)
## Assistant Manager – Agrahara

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் காப்புறுதி மற்றும் இடர் முகாமைத்துவம், காப்புறுதியில் வியாபார நிர்வாகம் வர்த்தகம், நிதி, முகாமைத்துவம் அல்லது நிதி மற்றும் காப்புறுதித் துறையில் வேறு ஏதாவது பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   மற்றும்

2. ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட காலம் தகைமைக்குப் பின்னரான அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்
2. பதவியின் விடயப் பரப்பிற்கு இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் கனிஷ்ட முகாமைத்துவ வகுதி (JM) மட்டத்தின் திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு** : MM 1-2 – 2016 : ரூபா [54,550- 10 x 1,375 - 15 x 1,910 – 96,950.00]

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**நியமனத்தின் தன்மை**

நிரந்தர நியமனம் என்பதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் உண்டு.
நிபந்தனைகள்:

**சகல விண்ணப்பதாரர்களும்**

- இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- பதவிக்குரித்தான கடமையைச் செய்வதற்கான உடல் மற்றும் உள ரீதியான தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- நன்னடத்தை தன்மையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பதாரர்கள்**

- உறவினரல்லாத சிபாரிசு செய்யக்கூடிய இருவரின் பெயர் மற்றும் முகவரி சகிதம் தயாரித்துக்கொண்ட சுய தரவு விபரங்கள் சகிதமான விண்ணப்பப் படிவத்தை, சகல கல்விச் சான்றிதழ்கள், தொழில்சார் தகைமைகள், சேவை அனுபவத்தை உறுதி செய்யும் பிரதிகள் சகிதம் அனுப்புதல் வேண்டும். தற்போது அரச / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்டசபைகளில் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
- பிரதான நிறைவேற்று அதிகாரி, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02 எனும் முகவரிக்கு 2024-07-11ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்,**
**இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு - 02**